# Suspension factsheet: supporting your child's wellbeing

## Parent/carer information

# இடைநிறுத்தம் குறித்த தகவல் தாள்: உங்களுடைய பிள்ளையின் பொதுநலனிற்கு ஆதரவுதவியாக இருத்தல்

## பெற்றோர்/பராமரிப்பாளருக்கான தகவல்

### உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் எவ்வாறு ஆதரவுதவி செய்யலாம்

உங்களுடைய பிள்ளையின் உடல்நலத்திற்கும் பொதுநலத்திற்கும் ஆதரவுதவி அளிக்கும் பொழுது, இதைப் பற்றிய நிபுணத்துவம் வாய்ந்த தகவல்களையும், அறிவுரையையும் முதலில் நாடுவது நல்லது. உங்களுடைய பிள்ளையின் பொதுநலத்திற்கு ஆதரவுதவி செய்வதைப் பற்றிய நடைமுறைக்கேற்ற அறிவுரை மற்றும் தகவல்களுக்குப் பின் வரும் பக்கத்தில் உள்ள தகவல் வளங்களை பாருங்கள்:

- பொதுநலம் (Wellbeing)

பாடசாலைக்கும், மாணவ-மாணவியரது வீட்டிற்கும் இடையேயுள்ள நேர்முகமான, மற்றும் ஒளிவு-மறைவற்ற தொடர்பாடல் என்பது மாணவ-மாணவியர் வெற்றியடைவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பினை அளிக்கும்.

- உங்களுடைய பிள்ளை பாடசாலை சமூகத்தில் மதிக்கப்படும் ஒரு அங்கத்தவராவார் என்பதை அவருக்கு மீண்டும் உறுதிப்படுத்துங்கள்.
- கரிசனங்கள் எதுவும் இருப்பின் அவற்றைப் பாடசாலைக்குத் தெரியப்படுத்துங்கள்.
- கல்வியில் உங்களுடைய பிள்ளை கொள்ளும் ஈடுபாட்டிற்கு ஆதரவுதவியாக இருக்கும் யுக்திகளை உருவாக்கவும், அவற்றை நடைமுறைப்படுத்தவும் பாடசாலை அணியினருடன் சேர்ந்து செயல்படுங்கள்.
- உங்கள் பிள்ளையின் இடைநீக்கம் தீர்மான கூட்டத்தில் கலந்துகொள்ளவும். நேர்மறை விவாதத்திற்கான சிறந்த வாய்ப்பை வழங்கும் வடிவமைப்பைப் பயன்படுத்தி இது நேருக்கு நேர், ஆன்லைனில் அல்லது தொலைபேசியில் நடத்தப்படலாம்.
- நேர்முகமான, பாதுகாப்பான அனைவரையும் உள்ளடக்கக் கூடிய மற்றும் மதிப்பு-மரியாதை மிக்க கல்விச் சுழல்களை உருவாக்கும் தகுந்த நடத்தை முறைகளைப் பற்றி உங்களுடைய பிள்ளையுடன் பேசுங்கள்.
- உங்களுடைய பிள்ளையின் எண்ணங்களையும், கருத்துக்களையும் மற்றவர்களுடன் தயக்கமின்றிப் பகிர்ந்துகொள்ளுமாறு அவரை ஊக்குவியுங்கள்.

### இடை நிறுத்த காலத்தில் வீட்டிலிருந்து படித்தல்

- இடை நிறுத்தக் காலத்தில் உங்களுடனும், உங்களுடைய பிள்ளையுடனும் ஊழிய அங்கத்தவர் ஒருவர் அவ்வப்போது தவறாமல் தொடர்புகொள்வார்.
- அமைதியான இடம் ஒன்றை உங்களுடைய பிள்ளைக்கு ஏற்பாடு செய்து கொடுத்தும், அவருடைய படிப்பு எவ்வாறு முன்னேறிக்கொண்டிருக்கிறது என்று அவரைக் கேட்டும் அவருடைய படிப்பிற்கு உதவுங்கள்.
- உங்களுடைய பிள்ளைக்கு ஓய்வு இடைவேளைகள் இருப்பதையும், அவர் தண்ணீர் அருந்துவதையும், அவர் மன-அழுத்தத்திற்கோ, கவலைக்கோ ஆளானால் அவருக்கு ஆதரவுதவியளிப்பதையும் உறுதிப்படுத்துங்கள்.
- உடல்-ரீதியான நடவடிக்கைகளுக்கென நேரம் ஒதுக்குங்கள்.
- தொழில் நுட்ப சாதனங்களை உங்களுடைய பிள்ளை பாதுகாப்பாகப் பயன்படுத்தும் வகையில் மேற்பார்வை செய்யுங்கள். உங்களுக்கு உபயோகமாக இருக்கவல்ல தகவல்கள் மற்றும் மூலவளங்களை 'தொழில்-நுட்பப் பயன்பாடு' (Using technology) எனும் வலைத்தலத்தில் காணலாம்.

### உதவிகரமான இணைப்புகள்

- 'கல்விப் பொதிகள்' (Learning packages)
- 'இயலாமையுடையோர் கல்வி மற்றும் ஆதரவுதவி அறிவுரை' (Disability learning and support advice)
- நடத்தை ஆதரவுதவிப் பொதி : பெற்றோருக்கான ஆதரவு (Behaviour support toolkit: support for parents)
- வீட்டிலிருந்து கல்வி பயில உங்களுடைய பிள்ளைக்கு உதவுதல் (Helping your child learn from home)
- 'சிறார் உதவி-இணைப்பு' (Kids Helpline) என்பது 5 முதல் 25 வயது வரைக்கும் உள்ள இள வயதினருக்கான ஆஸ்திரேலியாவின் ஒரே இலவசத் தொலைபேசி-வழி அறிவுரையாலோசனை சேவையாகும். 1800 55 1800 எனும் இலக்கத்தினை அழையுங்கள்.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ள விரும்பி, ஆங்கில மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமறு தொலைபேசி இயக்குநரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.